# ஆண்டவரைக் காணிக்கையாக அர்ப்பணித்தல் விழா

## திருப்பலி முன்னுரை

பிரியமானவர்களே! பிறந்த இயேசுவை பெற்றோர் காணிக்கையாக்கினார்கள் என்பதனை விழாவாக கொண்டாட திருஅவை இன்று அழைப்பு தருகின்றது.

இவ்விழா கொண்டாட்டததிற்கு தங்களை அன்புடனே வாழ்த்தி வரவேற்கின்றோம். கரங்களில் திரிகளை ஏந்தி, ஆண்டவரை வரவேற்போம். புறஇன மக்களுக்கும் ஒளியாக உதிர்த்த இயேசுவை நாமும் சந்தித்து மகிழவே இன்று அழைக்கப்படுகின்றோம்.

நல்ல பெற்றோராக இருந்து, தன்னுடைய குழந்தைக்கு செய்ய வேண்டிய மறை கூறித்த காரியங்களை மரியாளும், வளனாரும் செய்து கொடுத்தது போல, இன்றைய காலச் சூழலில் பெற்றவர்கள் செய்து கொடுத்து வருகின்றோமா? என்கின்ற வினாவோடும் பங்கேற்பது சிறப்பானது.

நம்மை ஆயத்தப்படுத்திக் கொள்ள முன்வருவோம்.

## இறைமக்களின் மன்றாட்டுகள்

*பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

1. தலைமைத்துவ பொறுப்பில் உள்ளவர்கள், தங்களது மாதிரிகையை கிறிஸ்துவின் மேல் பதித்து, நேர்மறை சிந்தனைகளோடு, மதிப்பீட்டு வாழ்வு வாழ அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. தரப்பட்டுள்ள இந்த இலக்கியத் திங்களில் புத்தகங்களின் அருமை உணர்ந்து, அடுத்தவர்களின் உணர்வுகளுக்கும், அனுபவத்திற்கும் மதிப்பளித்து வாழ, அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. தீர்க்கதரிசிகள் சிமியோன், அன்னா போல நம்பிக்கையோடு இருந்து உம்மை கண்டு அனுபவித்து அறிக்கை செய்திட அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. பொதுத் தேர்வுக்காய் தங்களை ஆயத்தப்படுத்தும் உள்ளங்களை உம் ஞானத்தால் ஆசீர்வதித்து, சரியான பாதையிலே பயணிக்க அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

5. எல்லா மக்களும் உம் அருளை கண்டு உம்மிலே சரணடைய தூய ஆவியின் அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**

**மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.**

**amirsundar@gmail.com;**

**+ 91 944 314 0660; www.arulvakku.com**